பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
4.00

சுடர்: 6 பிரமோதூத ௵ மாசி ௴ 16 ௳ வியாழக்கிழமை (28-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர்: 93

உலர் உணவு நிவாரணம் இன்னும் ஒரு வாரத்துக்கே?

செயலக வட்டாரங்கள் சிவப்புக் கொடி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 28

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணம், இப்போது நடைமுறையில் உள்ள தொடரின் ஆறாம் கட்டத்துடன் நிறுத்தப்படக் கூடும். யாழ். செயலக வட்டாரங்கள் இவ்வாறு அபாய அறிவிப்புச் செய்துள்ளன.

அரசு தந்த உணவுப் பொருள்கள் போதிய அளவில் இல்லை. கையிருப்பில் உள்ளவற்றை மதிப்பிட்டால் ஆறாம் கட்டத்தை வழங்குவது கூட கஷ்டமாகத்தான் இருக்கும் – என்றும் அவ்வட்டாரங்கள் விளக்கின.

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இடம் பெயர்ந்தோர், தொழில் இழந்தோருக்கு நிவாரணம் வழங்கும் புனர்வாழ்வு அமைச்சின் வழமையான நிவாரணத் திட்டப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப் 28

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆனையிறவு இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேறி அருகில் காவல் அரண் அமைக்க முற்பட்டனர்.

விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி அந்த முயற்சியை முறியடித்தனர். [ஓ]

முச்சந்தி முரளி

[illegible]
குமோ…………?

பாலம்போட்டாறில் 5 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், பெப். 28

திருகோணமலை மாவட்டம் பாலம்போட்டாறு பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர். அவர்களிடம் இருந்த ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ஜெயபுர, பாலம்போட்டாறு கோயிலடி, பாலம்போட்டாறு பாடசாலை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீதே கோயிலடி முகாமுக்கும் பாடசாலைக்கும் இடையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

3 லட்சம் தோ. தொழிலாளர் நேற்று வேலை நிறுத்தம்

கொழும்பு, பெப். 28

சம்பள அதிகரிப்புக் கோரியும், தேயிலைத் தோட்டங்களில் நிலவும் மோசமான நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மூன்று லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், அரசு சார்புடைய ஐக்கிய தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குபற்றவில்லை. ஏனைய சிறிய சங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

அரச ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என இச்சங்கங்கள் கோரியுள்ளன. [உ-5]

ஈராக்கின் நஸீரியா நகரை கைப்பற்றுவதற்கு முயற்சி!

ஈராக்கிய நகரான நஸீரியாவைக் கைப்பற்றுவதற்காக நேசப்படைகள் ஈராக்கின் தென்பகுதியில் கடும் சண்டையிட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த நகரை பன்னாட்டுப் படையினர் தம்வசம்கொண்டு வந்துவிட்டால், பின்வாங்கிச் செல்லும் ஈராக்கிய படையினர் ஈராக் துறைமுக நகரான பஸ்ரா மற்றும் தலைநகர் பக்தாத் ஆகியவற்றுக்குச் செல்லும் பிரதான பாதை துண்டிக்கப்பட்டுவிடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சதாமை முடிக்க முயற்சி

ஜனாதிபதி சதாம் ஹூசேனை சிறுமைப்படுத்தி தீர்த்து கட்டுவதான சண்டை தான் இப்போது வளைகுடாவில் இடம் பெற்று வருவதாக தனது வளைகுடா செய்தியாளரின் தகவலை ஆதாரம் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

பிந்திய செய்தி

ஐ. நா. தீர்மானங்களை ஏற்க ஈராக் இணக்கம்

லண்டன், பெப். 28

குவைத்தை ஈராக் கைப்பற்றியதை ஆட்சேபித்து ஐ. நா. சபை நிறைவேற்றிய சகல தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வது என ஈராக் நேற்றிரவு முடிவு செய்தது.

ஈராக்குக்கு எதிரான யுத்தம் உடனடியாக நிறுத்தப்படுவதோடு, பொருளாதாரத் தடையும் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டால் ஐ. நாவின்— சகல — 12 தீர்மானங்களையும் ஈராக் ஏற்றுக் கொள்ளும்.

இவ்வாறு தெரிவித்து ஈராக் அமைச்சர் தாரீஸ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

60 ஆயிரம் துருப்புகள் சரண்?

★ ஈராக்கினுள் தப்பிச் செல்ல முயன்ற ஈராக்கின் புரட்சிக் காவலர் படைக்குச் சொந்தமான 50 டாங்கிகளை அமெரிக்கப் படையினர் குவைத்தினுள் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர் என்று அறிவிக்கப்படுகிறது.

★ கடந்த செவ்வாய் இரவு குவைத் – ஈராக் எல்லையில் பின் வாங்கிச் சென்று கொண்டு இருந்த ஈராக்கிய புரட்சிக் காவலர் படையின் மூன்று பிரிவுகளை அமெரிக்கப் படைகள் முற்றாக அழித்தன என்று சவூதி தலைநகர் ரியாத்தில் அறிவிக்கப்பட்டது.

ஈராக்கியரின் 150 டாங்கிகள் பன்னாட்டுப் படையினரால் அழிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

★ பன்னாட்டுப் படையினரின் தீவிர தாக்குதல் காரணமாக ஈராக்கின் 26 இராணுவ டிவிஷன்களைச் சேர்ந்த இரண்டு லட்சம் வீரர்கள் செயலிழக்கச் செய்யப்பட்டனர் என்றும் அமெரிக்க தரப்பு அறிவித்தது.

★ பன்னாட்டுப் படையினரிடம் சரணடைந்த ஈராக்கிய படையினரின் எண்ணிக்கை 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை இருக்கலாம் என்று பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கினுள் ஊடுருவல்

★ ஈராக்கினுள் பன்னாட்டுப் படையினர் வெகுதூரம் ஊடுருவியுள்ளனர் என்பதை ஈராக் அரசு நேற்று முதல் தடவையாக ஒப்புக்கொண்டது. ஈராக்கினுள் நஸீரியா நகர் அருகில் பன்னாட்டுப் படையினரின் விமானப்படை அணி ஒன்று நேற்றுத் தரை இறங்கியதாக ஈராக் இராணுவ அறிக்கை ஒன்று தெரிவித்தது.

★ குவைத் நகரினுள் நேற்று குவைத் படைகள் முன் செல்ல பன்னாட்டுப் படைகள் பின்னே அணிவகுத்துச் சென்றன.

★ விடுவிக்கப்பட்ட குவைத் நாட்டில் மூன்று மாதங்களுக்கு இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக மன்னர் அல் சபா அறிவித்திருக்கிறார்.

அவர் இன்று வியாழக்கிழமை குவைத்துக்குத் திரும்பக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மில்க்வைற் சுத்தமான வேப்பெண்ணெய் விளக்கெரிக்க, மருத்துவ பாவனைக்கு, திரவ சவர்க்காரம் [Liquid Soap] தரிந, சிக்கனமான சலவைக்கு சகல ப.நோ.கூ. சங்கங்களிலும், கடைகளிலும் விற்பனையாகிறது. [சி/5806]

வீடு தேவை

மாநகர எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு:- க. தர்மகுலசிங்கம் 213/சி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[15994]

மீரா வெளியீடுகள்

வித்தியாசமான கதைகளில், கருத்தில் கன்னித் தமிழ் உரையாடலில் சிறந்த நாவல்கள். தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதியது. அர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம்' திருக்கணிதம் சாவகச்சேரி, பிக்பென்ஸ் [B] கிளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [15987]

மணமகள் தேவை

31 வயதுள்ள 7 இல் செவ்வாயுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை. பெண் யாழ்ப்பாணச் சுற்றாடலில் விரும்பத்தக்கது. திருவிளங்கம், 16/16, வளன்புரம, புதிய மாங்கல்யா மலர்ரி சேவிஸ். [15993]

மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க B.Sc., 29 வயது ஆசிரியருக்கும், இந்து குற்றமுள்ள 31 வயது எஞ்சினியருக்கும், இந்து குற்றமுள்ள 31 வயது Marketing Executive க்கும் மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[15992]

புத்தகங்கள்

வர்த்தகமும், நிதியும் 1 [உயர்தரவகுப்புகளுக்குரியது] ஆக்கம் தே. ஜெயராமன் B. com, M. B. A. [விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்] விலை ரூபா 48/ – வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[சி 5785]

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II ஆசிரியர் K. சங்கர ஐயர் B.Sc [கரப்பான் பூச்சியும், முள்ளந்தண்டு விலங்குகளின் உதாரணமாக தேரையும், விளக்கப்படங்களுடன் வெளிவந்துள்ளது]' விலை ரூபா 37-50 வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

[சி-51 79]

★ BECON ★

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புகள்

A/L 92 புதிய பிரிவு

பொருளியல் — திரு. வரதராஜன்
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
வர்த்தகம் — திரு. லோகசிங்கம்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
இந்துநாகரீகம் — திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் — திருமதி மீரா
புவியியல் — பிரபல ஆசிரியர்

ஆரம்பம்: 2 - 3 - 1991

சனி 7.00 A.m.

முக்கிய குறிப்பு: 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

பொருளியல் — திரு S. வரதராஜன

A/L 91 சனி 8-9 தேசிய வருமானம்
ஞாயிறு 8-9 வரவு-செலவுத்திட்டம்

A/L 92 பிரிவு I [சனி, ஞாயிறு] 7 8
கேள்விக்கோட்பாடு
பிரிவு II [சனி, ஞாயிறு] 10 – 11
கேள்விக் கோட்பாடு

ஆரம்பம்: 2 - 3 - 1991

[சி-5804] சனிக்கிழமை.

ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
28 - 05 - 1959

இறைவனடியில்:
11 - 03 - 1990

திதி: 28 - 02 - 1991

அமரர் காந்திமதி செல்லத்துரை

நினைவில் அழியாத ஓவியமாய்!
கனவிலும் கலையாத காவியமாய்!
அலை கடல் மீதினில் அசையாத ஓடமாய்!
அன்பாலே எமை எல்லாம் முழ்கடித்த
-எம் உயிரே காந்தி!
உன் மகளின் துணைக்கு ஓர் தம்பிதனை அணைத்திட
அவள் ஆசைப்படியே கர்ப்பமுற்றாய்!
அம்மா! உன் பொன்னான மேனியிலே
பொல்லாத நோய் வந்து நான்கு நாட்களில்
எங்கள் எல்லோரையும் ஆறாத் துயரில்
-ஆழ்த்தி-விட்டு!
தம்பிதனை அணைத்திட்டு ஒளிவிளக்கே
-அணைந்து விட்டாய்!
இன்றோடு நீ பிரிந்து ஓராண்டு ஆனாலும்
எம் கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும்
-மாறவில்லை!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை இறைஞ்சும்:

**கணவன், மகள், ஐயா, அம்மா,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மகன்மார், மருமக்கள்,**

''திருமால் இல்லம்''
கோப்பாய் தெற்கு, கோப்பாய். [15996]

உப்பள ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 28

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, செம்மணி, கல்லுண்டாய், உப்பளங்களைச் சேர்ந்த சகலதர ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பளையில் உள்ள பிராந்திய அலுவலகத்தில் நடைபெறும். [இ]

---

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் துரைசிங்கம் சுதிகரன்

அன்னை மடியில்: 1966 - 02 - 05
மண்ணின் அடியில்: 1988 - 02 - 28

சிரித்த முகத்தினனே சிங்கார நடையினனே
பொரித்து விட்ட குஞ்சுகளை புன்பருந்து
கொண்டு செல்ல
தரித்து விட்ட தாய்ப்பறவை தன்னின்
நிலையது போல்
மரித்து உன் நினைவால் மயங்குகிறோம்
மாநிலத்தே!

உமது பிரிவால் வாடும்:

**அன்பு அப்பா, அம்மா, அண்ணா,
தம்பிமார், தங்கைமார்,
உற்றார் உறவினர்கள்.**

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [15999]

மரண அறிவித்தல்

சுந்தரலிங்கம் ஜெயகுமார்
(ஜெயம்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இ. சுந்தரலிங்கம் தம்பதிகளின் அன்பு மகன் ஜெயகுமார் 18 - 02 - 1991 அன்று ஜேர்மனியில் காலமானார். அன்னார் ராஜினி [ஜேர்மனி], சுகுமார் [கனடா], ராஜ்குமார் [சுவிஸ்லாந்து], சுரேஸ்குமார் [நோர்வே] ஆகியோரின் சகோதரனும் சிதம்பரப்பிள்ளை சுதிரமலைநாதன் [ஜேர்மனி], குமுதினி [இந்தியா], சாந்தினி [திருநெல்வேலி] ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

ம. சி. சிதம்பரப்பிள்ளை
தம்பதிகள்,
தெல்லிப்பழை.

து. விவேகானந்தராசா,
[பேபி]
தம்பதிகள்,
ராஜிவாசம்,
மல்லாகம்.

[15995]

• உதயன்

அவர்களின் முன்மாதிரி!

தென்மராட்சிப் பகுதியில் கொழும்பிலிருந்து வரும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. அவையும் அதிக விலைக்கு அன்றி, நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலைகளுக்கே மக்களுக்குக் கிடைக்கின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகுவதற்குப் பின்னணியில் நின்று உழைப்பவர்கள் தென்மராட்சிப் பகுதி வர்த்தகர்களே என்பது மனநிறைவைத் தரும் ஒன்றாகும். அவர்கள் அங்கம் வகிக்கும் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் செய்யும் அரிய பணிகள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்று விழைகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தினர், பெரும் கஷ்டங்கள், சிரமங்களின் மத்தியில் தாமே முன்நின்று, கொழும்பிலிருந்து இயன்றளவில், அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தருவிக்கின்றனர். அவற்றை எல்லா வர்த்தகர்களுக்கும் பங்கிடுகின்றனர். சில்லறை வியாபாரிகளுக்கும் வழங்குகின்றனர். நியாய விலையில் விற்கும் அதேவேளை ஏற்றுக்கொள்ளக்கூடிய லாபம் கிடைக்கும் விதத்திலேயே வியாபாரிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

• இவை மட்டுமன்றி, தாம் வழங்கும் உணவுப் பொருள்கள், பொதுமக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளில்தான் விற்கப்படுகின்றனவா என்பதனை அறிவதற்காகச் சங்கத்தினர் தாமே திடீர் பரிசோதனையும் நடத்துகின்றனர். அதிக லாபம் வைத்து விற்போரை மடக்கிப் பிடித்து அபராதமும் விதிக்கின்றனர்.

சரியாகச் சொல்வதானால், சாவகச்சேரி வர்த்தகர்கள், சமூகத்தின்பால் தமக்குள்ள கடமையை உரிய முறையில் உணர்ந்து செயற்படுகிறார்கள். பதுக்கல், கொள்ளை லாபம், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களைச் சுரண்டிப் பணம் சேர்த்தல் ஆகிய சமூகவிரோதக் குற்றங்களை நாடாமல், கஷ்டமான வேளையில் மக்களுக்கு உதவும் பரந்த நோக்குடன், சமூக உணர்வுடன் பணி செய்கிறார்கள்.

நிச்சயமாக, இவர்கள் குடாநாட்டின் ஏனைய வர்த்தகர்களுக்கு மட்டுமன்றி, ஏனைய தொழில்களில் ஈடுபட்டிருப்போருக்கும் வழிகாட்டிகள்; முன்னோடிகள். சுயநலம், சுயலாபம் தேடும் ஒரு சமூகத்தின் மத்தியில் மிளிரும் நன்மணிகள். அவர்கள் காலம், தேவை அறிந்து சமூகத்துக்கு உதவும் நன்மக்கள். இந்த மனப்பக்குவம் குடாநாட்டு மக்கள் எல்லோரிடமும் மலர்வதாக.

தீவுப்பகுதி - பூநகரி படகுசேவைக்கு முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 28

மண்டைதீவு கிழக்கு இறங்குதுறை, புங்குடுதீவு கிழக்கு சிப்பி ஏற்றும் துறை ஆகிய இரண்டையும் புனரமைப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டம், பூநகரி, கல்முனை, வெட்டுக்காடு ஆகிய பகுதிகளுக்குப் படகுச் சேவையை மேற்கொள்ள முடியும். இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். தனபாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய இரு இறங்குதுறைகளையும் பயன்படுத்தி முந்திய காலத்தில் தீவகப்பகுதி மக்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்குப் போக்குவரத்துச் செய்து வந்தனர்.

தற்போது நிலவும் போக்குவரத்துப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, தீவகப் பகுதி மக்களின் நன்மை கருதி இவ்விரு இறங்குதுறைகளையும் புனரமைப்புச் செய்ய உத்தேசித்துள்ளோம்.

இதற்கான செலவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து பெற்றுத்தருமாறு அரச அதிபரைக் கேட்கவுள்ளோம்.

இவ்வாறு வேலணை உதவி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். [ஓ-5]

விஞ். சங்க ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடக்கவிருக்கும் இக்கூட்டத்தில் சங்கத்துக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள யாப்பு விதிகள் பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படும். அன்று உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறும்.

யாழ். விஞ்ஞானச் சங்கம், விஞ்ஞான ஆய்வுகளை விரிவடையச் செய்தல், தமிழ்ப் பிரதேசத்திற்குத் தகுந்தவாறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பரப்புவது, அவற்றைப் பிரயோகிப்பது, விஞ்ஞானக்கல்வி, தொழில் நுட்பம் என்பவற்றை மேம்படுத்துவது ஆகிய பணிகளில் ஈடுபடும் என்று அதன் அமைப்பாளர்களில் ஒருவரான விஞ்ஞான பீடாதிபதி வி. கே. கணேசலிங்கம் தெரிவித்தார். [அ]

ஆரம்பக் கல்வி ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 28

சாவகச்சேரி கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கான கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கடந்த 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆரம்பக்கல்வி சேவைக்காலப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய சாவகச்சேரி கோட்ட ஆசிரியர்கள் இதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். [இ-6]

படை வாபஸ் பூர்த்தியாம்!

★ குவைத்தில் இருந்து தமது படைகள் அனைத்தும் நேற்றுடன் வெளியேறி விட்டதாக ஈராக் அறிவித்தது. கடைசித்துருப்பு நேற்றுக்காலை குவைத்தில் இருந்து திரும்பியதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் கூறினார் என பக்தாத் வானொலி அறிவித்தது.

★ ஈராக்கின் தெற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள ஈராக்கிய ராணுவ பிரிவுகளுக்கு ஜனாதிபதி சதாம் ஹுசேன் விஜயம் செய்து நேரில் பார்வையிட்டார் என்று பக்தாத் வானொலி செவ்வாய் மாலை அறிவித்தது.

பாலஸ்தீனியர் அதிர்ச்சி!

★ ஈராக்கின் படைவிலகல் அறிவிப்பினால் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தனர் என்றும், போரின் பின்னர் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது மேலும் இழுபறியாகும் என்று அவர்கள் அச்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

★ குவைத் நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ஏழு லட்சம் கோடி டொலர் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தகவலை வாஷிங்டன் போஸ்ட் நாளிதழ் நேற்று வெளியிட்டது.

புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக குவைத் வெளிநாடுகளுடன் 121 ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவற்றில் 71 திட்டங்களுக்கு அமெரிக்காவுடனும் ஏனைய திட்டங்களுக்கு குவைத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகளுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ள குவைத் அரசு விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

★ ஈராக்கிய படையினர் தப்பிச் செல்லப் பயன்படுத்தி வந்த பிரதான பாதை ஒன்றை அமெரிக்கப் படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சந்தர்ப்பங்களை சதாம் தவறிவிட்டார் என்கிறது ஈரான்

வளைகுடாப் போரை கௌரவமாக முடித்துக் கொள்ள அடுத்தடுத்துக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தவறவிட்டுவிட்டார்.

ஈரான் ஜனாதிபதி ரஸ்வன்ஜானி முன்தினம் நேற்று தெரிவித்தார்.

குவைத்தில் இருந்து தமது படைகளை வெளியேற்றும் முடிவை எடுப்பதில், ஜனாதிபதி சதாம் நீண்ட தாமதத்தை ஏற்படுத்தி விட்டார் என்றும் ஜனாப் ரஸ்வன்ஜானி சொன்னார்.

ஆசிரியர் படுகொலை தமிழ் மாணவரின் கல்விக்கு சாவுமணியா?

பல்கலை. மாணவர் அவை அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 28

ஆசிரியர்களின் படுகொலைகள் தமிழ் மாணவர்களின் கல்விக்கு சாவு மணியா?

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலையில் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஏனையவர்களின் படுகொலைகளைக் கண்டித்தும், மாணவர்களின் எழுச்சிக்கு ஆதரவளித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது:-

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஸ்ரீலங்கா அரசானது காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தமிழ் மக்களிடையே பட்டினிச் சாவையும் ஏற்படுத்த முயலுகிறது. பொருளாதாரத் தடையை விதித்து அதனை இறுக்கமாக்க இராணுவத்தின் மூலம் [illegible] முறைப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் விமானக்குண்டு வீச்சின் மூலம் பாடசாலைக் கட்டடங்களைத் தகர்க்கின்றனர். பாடசாலை மாணவர்களை பாடசாலைகளுடன் சேர்த்து அழிப்பதற்கு விமானக் குண்டுகள் வீசப்படுகின்றன.

இன்று இவற்றிற்கெல்லாம் மேலாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதன்மூலம் தமிழ்மக்களின் கல்வியையும் சீரழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது புலனாகின்றது.

ஜீ.சி.ஈ உயர்தரப்பரீட்சை, ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சை ஆகியவை பின்போடப்படுவதும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் எரிக்கப்பட்டதும் இவற்றின் தொடர் நிகழ்வுகளே.

இராணுவக் கெடுபிடி, பொருளாதார நெருக்கடி என்பனவற்றின் மத்தியிலும் எமது மாணவர்களின் கல்விபாதிக்கக் கூடாது எனும் தலையாய சிந்தனையுடன் தமது உயிரையும் துச்சம் என மதித்து சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனைவன்மையாகக் கண்டிக்கிறோம்.

சர்வதேச சமூகமும் ஸ்ரீலங்கா இனவெறி அரசின் இந்த கொடூர நடவடிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டும்.

வங்காலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பான எழுச்சி நடவடிக்கைகளுக்கும் —

ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு, பொருளாதாரத் தடை, உற்பத்தித்தடை ஆகியவற்றின் பாதிப்புகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாம் ஆதரவு அளிப்போம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள் மீது தாக்குதல்-

தென்மராட்சி, பெப். 28

சாவகச்சேரி, உப்புக்கேணி ஆலயம் ஒன்றில் நின்ற பக்தர்கள் மீது, நபர் ஒருவர் திடீரென மண்வெட்டியினால் தாக்குதல் நடத்தினார். இதனால் சிலர் காயமடைந்தனர்.

திங்களன்று நடந்த இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி, கனகபுரத்தைச் சேர்ந்த தே. பேரின்பநாயகம் [61 வயது] என்பவர் இருகைகளிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்கியவர் ஒரு மனநோயாளி என பின்னர் தெரியவந்தது. [ஓ-117]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அவாமி லீக் முன்னணியில்

டாக்கா, பெப்.28

நேற்று நடைபெற்ற பங்களாதேஷ் பொதுத் தேர்தலின் வாக்குகள் நேற்று நள்ளிரவு எண்ணப்பட்டுக்கொண்டிருந்த போது அவாமி லீக் கட்சி முன்னணியில் இருந்தது.

முதலாவது ஜனாதிபதி முஜிபுர் ரஹ்மானின் மகளான ஷேக் வஸினா அவாமி லீக் கட்சிக்குத் தலைமை வகிக்கின்றார்.

மற்றொரு முன்னாள் ஜனாதிபதி ஸியா-உர்-ரஹ்மானின் மனைவி பேகம் ஸியாவின் கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சி இரண்டாவது இடத்தில் இருந்தது. [உ]

கிணற்றில் வீசப்பட்ட 13 தமிழரின் சடலங்கள்!

மண் போட்டு மூடப்பட்டன!!

மன்னார், வங்காலை இராணுவத்தினரால் கடந்தவாரம் படுகொலை செய்யப்பட்டு, கிணறு ஒன்றில் போடப்பட்டிருந்த 13 தமிழர்களின் சடலங்களும் பின்னர் படையினரால் மண் போடப்பட்டு மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்டவர்களின் உறவினர்கள் இது குறித்து ஐ நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரியிடம் முறையிட்டனர்,

அந்த அதிகாரி இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு விசாரித்தார். படையினர் அது குறித்து எதுவும் தெரியாது என்று கூறி, மறுத்துவிட்டனர்.

அதைத் தொடர்ந்து சடலங்கள் போடப்பட்ட அந்தக் கிணறு ''புல்டோசரின்'' உதவியுடன் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு, படையினரால் மூடப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

தமிழின ஒழிப்புக்கு எதிராக ஆசிரியர்கள் போராடுவார்களா?

பயிற்சிக் கலாசாலை ஒன்றியம் கேள்வி

தமிழின அழிப்பு, தமிழீழத்தில் நடந்துவரும் கல்வி, கலாசார, உடைமை அழிப்புகள் போன்றவற்றை எதிர்த்துப் போராட ஆசிரியர்கள் முன்வருவார்களா?

இவ்வாறு கோப்பாய்/பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் விடுத்த அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பியுள்ளது.

''நாளைய மாணவர் எழுச்சியில் ஆசிரியர்களின் நிலைப்பாடு'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழினமானது சொல்ல முடியாத துன்பங்களையும் துயரங்களையும் இழப்புகளையும் சுமந்து நிற்கின்ற நிலையில், கல்வியும் அதனுடன் இணைந்த உயிரிழப்புகளும் உடைமை இழப்புகளும் தொடர்கின்றன.

இவ்வேளையில் இதற்கெதிரான போராட்டத்தை ஏற்படுத்தி வழி நடத்த வேண்டிய பாரிய பணி ஆசிரியர்களைச் சார்ந்தது.

அடக்குமுறைகள் மற்றும் அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மாணவர்களே சிறி எழுந்து போரிட முனைகின்ற வேளையில், ஆசிரியர்களில் அனேகர் ஒதுங்கி நடப்பது எவ்வாறு?

இவ்வாறான ஆசிரியர்களை நாளைய வரலாறு எள்ளி நகையாடும்; இவர்கள் மீது களங்கம் கற்பிக்கப்படும்.

இந்நிலையில் ஆசிரியத்துவத்தை வரைபுபடுத்தி சான்று பகிர்கின்ற நிலையினை, ஆசிரியத்துவம் என்ற உயர்வான நிலைக்கு அமையப்பெற்ற ஒவ்வொருவரும் தகர்த்தெறிந்து பாதுகாக்க முன்வரவேண்டும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ]

சூடுபட்டு சேதமடைந்த நிலையில்

படகு கரை ஒதுங்கியது; மூவரின் கதி தெரியவில்லை

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்றில் பிளாஸ்டிக் படகு. துப்பாக்கிச் சூடுபட்டு சேதமடைந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் வைத்து இப்படகு கடற்படையினரிடம் சிக்குண்டது தெரிந்ததே.

இப்படகில் சென்ற கணபதிப்பிள்ளை மகேந்திரன் [36 வயது], வேலுப்பிள்ளை வெற்றிவேலாயுதம் [28 வயது] செல்லத்துரை சிவசோதி [22 வயது] ஆகிய மூன்று குடும்பஸ்தர்களின் கதி என்ன என்று இன்னும் தெரியவரவில்லை

இதே படகில் சென்ற பஞ்சலிங்கம் [33 வயது] என்பவர் அன்றைய தினமே கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்துவிட்டார். [ஓ-144]

இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராமிய உற்பத்திக் குழுக்களின் முன்னூறு பிரதிநிதிகளுக்கான முழுநாள் கருத்தரங்கு ஒன்று யாழ். புனித மரியாள் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

விவசாயம், விவசாயம் சார் தொழில்கள், மீன்பிடித் தொழில், கைத்தொழில்கள் ஆகிய தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும் என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. [உ]

படகுச் சேவை சீரானது

நெடுந்தீவு, பெப். 28

கடந்த இரு தினங்களாக தடைப்பட்டிருந்த நெடுந்தீவு — குறிகாட்டுவான் படகுச் சேவை நேற்று மீண்டும் வழமைக்குத் திரும்பியது. [ஓ-111]

பாக். கடனுதவி

இலங்கைக்கு 28 கோடி ரூபா கடனை பாகிஸ்தான் வழங்கவுள்ளது. இது சம்பந்தமான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், டிராக்டர் மற்றும் யந்திராதிகளை வாங்க இக்கடனுதவி பயன்படுத்தப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. [ஓ-எ]

பர்லம்போட்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தத் தாக்குதலின்போது ரி56-2 ரக துப்பாக்கிகள்-4, அதற்குரிய மகஸின்-14, ரி81 ரக துப்பாக்கி-1, அதற்குரிய மகஸின்-3, ஐ. எம். ரவைகள்-375, ஜே. ஆர். ரக கைக்குண்டு-1 ஆகியன கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

உலர் உண..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரை ஆகக் குறைந்தது 34 வாரங்கள் உலர் உணவு விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இங்கு இடம்பெயர்ந்தோர், தொழில் இழந்தோருக்குக் கூட இதுவரை ஒன்பது வாரங்களுக்கு உரிய உலர் உணவு நிவாரணம் மட்டுமே வழங்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஏனைய சகலருக்கும் [மாதந்தம் 1500 ரூபாவுக்கு அதிகமான வருமானம் பெறுவோருக்கு] நான்கு வாரங்கள் இலவச நிவாரணமும், ஐந்து வாரங்கள் பணத்துக்கு நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது

அரசாங்கம் போதியளவு உணவுப் பொருள்களை அனுப்பி நடைமுறையில் உள்ள ஆறாம் கட்டம் முடிந்தபின்னரும் நிவாரணம் வழங்க அனுமதி அளித்தால் மட்டுமே உலர் உணவு நிவாரணத்தைத் தொடர முடியும் என்று செயலக வட்டாரங்கள் மேலும் தகவல் தந்தன. [அ-3]

மற்றோர் அணி சுற்றிவளைப்பு

★ குவைத்தின் சர்வதேச விமான நிலையத்தில் நிலைகொண்டிருந்த ஈராக்கியப் படைகள் அனைத்தும் பன்னாட்டுப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. இவ்விமான நிலையத்தை அமெரிக்கப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

★ பின்வாங்கிச் சென்று கொண்டிருந்த ஈராக்கிய படையினரின் ஒரு பிரிவை ஈராக்கின் தெற்குப் பகுதியில் வைத்து பன்னாட்டுப் படையினர் சுற்றி வளைத்துள்ளனர் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

★ குவைத்தில் இருந்து பின்வாங்கிச் செல்லும் ஈராக்கிய படையினர் தாங்கள் பணயமாக பிடித்து வைத்திருந்த — குவைத் பிரசைகளையும் குவைத் இராணுவ அதிகாரிகளின் உறவினர்களையும்—தம்முடன் கூட்டிச்செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. தீர்மானங்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அஸீஸ் எழுதிய கடிதம் நேற்று மாலை ஐ. நா. பொதுச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டால் யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது பற்றி ஆராயவும்—

குவைத் மீது தனக்கு உரிமை இல்லை என்று அறிவிக்கவும்—

ஜெனிவா ஒப்பந்தப்படி யுத்தக் கைதிகளை விடுவிக்கவும் ஈராக் தயார் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சதாம் ஹுசேன் தனது அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு நிபந்தனை விதிப்பதாக இருப்பதாகவும்—

தேவைப்படுவதை நிறைவேற்றுவதற்கு முற்றிலும் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்து ஈராக்கின் அறிவிப்பை அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

மரண அறிவித்தல்கள்

கதிரவேலு சிற்றம்பலம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய கணக்காளர் கதிரவேலு சிற்றம்பலம் நேற்றுக் காலமானார்.

இவர் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், மாதினி, மாலா, விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசிங்கம், ஸ்ரீயோகநாதன், சுமித்திரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று 11 மணிக்கு பிப்பிலிமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவ[illegible]:

[15678] ஜெகராஜசிங்கம்

கணபதிப்பிள்ளை மயில்வாகனம்

[Retired Electrical Engineer]

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மயில்வாகனம் அவர்கள் 26-02-1991 இல் காலமானார்.

இவர் சொர்ணத்தின் கணவரும், காலஞ்சென்ற ஜெனகன், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், முல்லைத்தீவைச் சேர்ந்த இராமநாதன், இரத்தினசாமி, தம்பாலசிங்கம், காலஞ்சென்ற நடனசபாபதி, சிவகாமசுந்தரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை [3-3-91] காலை 10-00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சொர்ணம் மயில்வாகனம்
[மனைவி]

Opposite Waterworks
தண்ணீர் தாங்கி எதிர் ஒழுங்கை,
[பலாலி வீதி] திருநெல்வேலி. [16092]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 2 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.